**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**இரண்டாம் ஆண்டு – மூன்றாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

ஜனவரி – பிப்ரவரி 2021

**P103 இக்காலக் கவிதையும் சிற்றிலக்கியமும்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. கவிதையின் இரு வகைகளைக் கூறுக?
2. வெண்பாவின் ஈற்றடியில் எத்தனை சீர்கள் இடம்பெறும்.
3. 'பாரதி' என்பதன் பொருள் என்ன?
4. பாரதிதாசனின் புனைபெயர்களுள் இரண்டினைச் சுட்டுக.
5. கண்ணதாசனின் இயற்பெயர் என்ன?
6. மொழி உரிமைப்போரில் உயிர் கொடுத்த வீரர்கள் யாவர்?
7. 'கிளிக்கூண்டு' என்னும் கவிதையின் ஆசிரியர் யார்?
8. 'சீலம்' என்ற சொல்லின் பொருள் என்ன?
9. மன்னனின் பத்து உறுப்புகளைப் பாடும் இலக்கிய வகை எது?
10. தமிழின் முதல் தூது நூல் எது?
11. பள்ளி எழுச்சி என்ற இலக்கிய வகை எந்தத் துறையிலிருந்து தோன்றியது?
12. பரணி இலக்கியத்தில் இடம்பெறும் உறுப்புகளின் எண்ணிக்கை எவ்வளவு?
13. 'தஞ்சைவாணன் கோவை' எந்த இலக்கண நூலுக்கு உதாரண நூலாக எழுதப்பட்டது,
14. தொல்காப்பியர் 'விருந்து' என்று எதைக் குறிப்பிடுகிறன்றார்?
15. பெண்பால் பிள்ளைத்தமிழின் இறுதி மூன்று பருவங்கள் யாவை?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. கவிமணியின் படைப்புகளைப் பட்டியலிடுக.
2. நாமக்கல் கவிஞரின் நாட்டுப்பற்றினை விவரிக்க.
3. சிற்பி கூறும் கவிதைக் கொள்கைகள் யாவை?
4. தமிழ்மொழி குறித்து முடியரசன் கூறுவனவற்றை எழுதுக.
5. மடல் ஏறுதல் என்றால் என்ன?
6. திருக்காவலூர்க் கலம்பகத்தின் சிறப்புகளை விவரி.
7. சதக இலக்கியம் – குறிப்பு வரைக.
8. பிள்ளைத்தமிழின் இலக்கணத்தைக் கூறுக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) பட்டுக்கோட்டையாரின் பொதுவுடைமைச் சிந்தனைகள் குறித்துக் கட்டுரை வடிவில் விடை தருக.

(அல்லது)

(ஆ) புதுக்கவிதையின் தோற்றம், வளர்ச்சி குறித்துக் கட்டுரைக்க.

2. (அ) அப்துல் ரகுமான் கவிதைகளில் இடம்பெற்றுள்ள இலக்கியத் திறன்களைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) சிற்றிலக்கியத்தின் வளர்ச்சி நிலைகளை விரித்துரைக்க.

3. (அ) சரபோஜி மன்னர் செய்த தொண்டுகளை ஆராய்க.

(அல்லது)

(ஆ) பாவேந்தர் பிள்ளைத்தமிழின் சிற்பபியல்புகளைத் தொகுத்து எழுதுக.

***